# ஆர்சிஎல் ரீடெய்ல் லிமிடெட்

CIN L52330TN2010PLC077507

பதிவு அலுவலகம்: சப்னா டிரேட் சென்டர், 10வது மாடி, 10பி/2
எண்.109,பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை – 600 084.

Tel: 044-40508024, E-mail: rclretail@gmail.com

## பொது அறிவிப்பு—அசாதாரண பொதுக்கூட்டம்

நிறுவனத்தின் பெயரை ஆர்சிஎல் ரீடெய்ல் லிமிடெட் என்பதிலிருந்து சாந்தி குரு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்று மாற்றம் செய்வதற்காக கம்பெனி உறுப்பினர்களின் அசாதாரண பொதுக்கூட்டம் (EGM) வெள்ளிக்கிழமை, 7 அக்டோபர், 2022 அன்று இந்திய நேரப்படி பகல் 12.00 மணிக்கு காணொலி காட்சி (VC)/பிற ஒலி ஒளி வழிமுறைகள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான கோவிட்–19 தொற்றுநோய் மற்றும் மக்கள் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் சட்டம், 2013ன் விதிகள் மற்றும் இது சம்பந்தமாக பொருந்தக்கூடிய எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மேற்சொன்ன கூட்டம் VC/OAVM மூலம் கூட்டப்படும்.

கட் ஆப் தேதியான 30 செப்டம்பர், 2022 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களில் உள்ள நபர் மட்டுமே 'தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு' அல்லது அசாதாரண பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு செய்ய உரிமை உள்ளவர் ஆவார்.

மின்னணு முறையில் அதாவது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு' அல்லது அசாதாரண பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்டின் (சிடிஎஸ்எல்) சேவைகளுக்கு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. VC/OAVM மூலம் அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்த விரிவான வழிமுறைகளுக்கு உறுப்பினர்கள்/பங்குதாரர்கள் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பை படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் அல்லது கம்பெனி/பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுகின்றன, மேற்கண்ட ஆவணங்கள் கம்பெனியின் வலைத்தளம் rclretail.in மற்றும் பிஎஸ்இ லிமிடெட் வலைத்தளம் www.bseindia.com மற்றும் சிடிஎஸ்எல் வலைத்தளம் https://wwww.evotingindia.comல் கிடைக்கின்றன.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில்:

(i) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, 3 அக்டோபர் 2022 அன்று இந்திய நேரப்படி காலை 10.00 மணி தொடங்கி வியாழக்கிழமை, 6 அக்டோபர் 2022 அன்று இந்திய நேரப்படி மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது. மேற்சொன்ன காலத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படமாட்டாது என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

(ii) இந்த காலத்தில், தற்போதைய உறுப்பினர்கள் மற்றும் அறிவிப்பு அனுப்பிய பின்னர் பங்குகளை பெற்று கம்பெனியின் உறுப்பினர்கள் ஆனவர்கள், கட் ஆப் தேதியான 30 செப்டம்பர் 2022 வெள்ளிக்கிழமை அன்று காகித வடிவில் அல்லது பத்திர வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் சிடிஎஸ்எல் மின்னணு வாக்குப்பதிவின் மூலம் அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

(iii) அசாதாரண பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் நடைபெறும் அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

(iv) பங்குதாரர்கள்/உறுப்பினர்கள் உள்நுழைவின்கீழ் https://www.evotingindia.comல் சிடிஎஸ்எல் மின்னணு வாக்குப்பதிவு முறையில் உறுப்பினர்கள் அணுகலாம். அசாதாரண பொதுக்கூட்டத்தில் சேர அதே இணைப்பு செல்லுபடியாகும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு செயல்முறைக்கான விரிவான வழிமுறைகள், அசாதாரண பொதுக்கூட்டத்தில் சேருதல் மற்றும் அசாதாரண பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு ஆகியவை அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) கூட்டம் தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னரும், அத்தகைய திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 15 நிமிடங்கள் வரை VC/OAVM மூலம் அசாதாரண பொதுக்கூட்டத்தில் சேர உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

vi) மின்னணு வாக்களிப்பிற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெற டெபாசிட்டரிகளிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் ஆர்டிஏவின் மின்னஞ்சல் ஐடி kandhimathi@cameoindia.comக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

vii) அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் உறுப்பினர்களின் ஆய்வுக்கு கிடைக்கின்றன. அது குறித்து அவர்கள் கம்பெனியின் மின்னஞ்சல் ஐடி rclretailcs@gmail.comக்கு எழுதலாம்.

(viii) அசாதாரண பொதுக்கூட்டத்தில் 'தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு' செயல்முறை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை ஆராய திரு. பங்கஜ் மேத்தா, பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் (M.No.A29407, CP.No.10598), பார்ட்னர், M/s. ஏ.கே. ஜெயின் & அசோசியேட்ஸ், கம்பெனி செயலாளர்கள், அவர்கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ix) ஆய்வாளரின் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட முடிவுகள் சிடிஎஸ்எல் வலைதளம் www.evotingindia.comல் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட நபரால் எழுத்துப்பூர்வமாக முடிவு அறிவிக்கப்பட்ட உடனேயே வைக்கப்படும்.

x) கூட்டத்தின் போது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த/கேள்விகளைக் கேட்க விரும்பும் பங்குதாரர்கள் தங்களை ஒரு பேச்சாளராக பதிவு செய்து, அவர்களின் பெயர், டிமேட் கணக்கு எண்/போலியோ எண், மின்னஞ்சல் ஐடி, மொபைல் எண்ணை rclretail@gmail.comல் அசாதாரண பொதுக் கூட்டம் துவங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக தங்கள் கேள்விகள் மற்றும் கோரிக்கைகளை அனுப்பலாம்.

அசாதாரண பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வது மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான ஏதேனும் வினவல்/தெளிவுபடுத்தல் அல்லது பிரச்சினைகளுக்கு, நீங்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் உதவி பிரிவின் கீழ் www.evotingindia.comல் கிடைக்கும் மின்னணு வாக்களிப்பு கையேட்டைப் பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் எழுதலாம் அல்லது திரு. நிதின் குந்தர் (022–23058738) அல்லது திரு. பாவேஷ் பிம்புட்கர் (022–23058543) அல்லது திரு. ராகேஷ் தல்வி (022–23058542) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

குழுவின் ஆணைப்படி
ஆர்சிஎல் ரீடெய்ல் லிமிடெட்டுக்காக

இடம்: சென்னை
தேதி: 02.09.2022

ரத்தன்சந்த் லோதா
தலைவர்
(DIN: 01534269)

## பிரதின் லிமிடெட்